1995 மார்ச் 24]

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபூதி, வரி, விதிக்கப்படுகின்ற பட்டியலில் இடம் பெற்ற பொருள் அல்ல. பட்டியலில் இடம் பெறாத பொருட்களுக்கு பொதுவாக 8 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. அந்த வகையில் வரி விதிப்புக்கு உட்படுமானால், 8 சதவீதம் வரி விதிப்புக்கு இந்த விபூதி உட்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதயதெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் உள்ள 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆலயங்களில் ஒளிவிளக்கு ஏற்றுவதற்கு, ஒரு கால பூசை நடைபெறுவதற்கு வழி செய்திருக்கிறார்கள். பொதுவாக ஆலயங்களில் விபூதி விற்கப்படுவதில்லை. இலவசமாகத்தான் பக்தர்களுக்கு கிடைக்கின்றது. எப்படி இலவசமாக தரிசனம் செய்கிறார்களோ அதைப்போன்று ஆலயங்களில் இலவசமாக விபூதிகள் தரப்படுகின்றன. ஆகவே, வரி விதிக்கப்படுகின்றது என்று யாரும் ஆதங்கப்பட வேண்டியதில்லை. பக்தர்கள் ஆதங்கப்படவும் இல்லை. தமிழகத்தில் யாருக்கும் இதற்கு வரி இருக்கின்றது என்ற உணர்வு ஏற்படவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் மட்டும் இந்த வரி விதிப்பு இல்லை. எல்லா மாநிலங்களிலும், பெரும்பாலும் இருக்கின்றன. ஆந்திராவில் 6 சதவீதமும், கர்நாடகத்தில் 8 சதவீதமும், கேரளாவில் 6 சதவீதமும், பாண்டிச்சேரியில் 3.5 சதவீதமும், மகாராஷ்டிராவில் 10 சதவீதமும் வரி விதிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. ஓ.எஸ். அமர்நாத், மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

93—

புதிய தொழில் துவங்க வரிச்சலுகை

***35156**—*திரு. ஓ.எஸ். அமர்நாத்:*

மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் புதியதாக தொழில் துவங்குவதை ஊக்கப்படுத்துவதற்காக வரிச் சலுகை அளிக்கப்படுகிறதா?

(ஆ) தள்ளிவைக்கப்பட்ட விற்பனை வரியை செலுத்தப்பட்டதாகக் கருதும் திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை கோடி ரூபாய் வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1-4-1991 முதல் 31-3-1992 வரை 212.65 கோடியும், 1-4-1992 முதல் 31-3-1993 வரை 322.37 கோடியும், 1-4-1993 முதல் 31-3-1994 வரை 489.15 கோடியும், ஆக மொத்தம் 1024.17 கோடி ரூபாய் தொழிற்சாலைகளுக்கு வரித் தள்ளுபடி, வரி நிறுத்தி வைத்தல் போன்ற சலுகைகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை தொழில் வளமாக்குகின்ற ஒரு நல்ல செயல்பாட்டோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே புதிதாக தொழில் துவங்க, வளப்படுத்த வரிச் சலுகைகள் வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். எத்தனை கோடி வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறது என்று விளக்கமாகச் சொன்னார்கள். அதே நேரத்திலே மிகப் பெரிய தொழிற்சாலை துவங்குவதற்கு ஏதாவது வரிச் சலுகை அளிக்கப்படுகின்றதா? எவ்வகையில் அந்த வரிச் சலுகை அளிக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிகப்பெரிய தொழிற்சாலைகள் பண மூதலீடு ஆதாரத் தொகையோடு சில வரிச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றது. புதியதாக துவங்குவதற்கு ரூ.50 கோடி முதல் ரூ.100 கோடி வரை முதலீடு செய்யும் தொழிற்சாலைகளுக்கு ரூ. 25 லட்சம் பண முதலீடு ஆதாரத்தை அதாவது சப்சிடியாக மற்றும் 5 வருஷத்திற்கு வரி விலக்கு அளித்தல் அல்லது வரி செலுத்தும் காலத்தை தள்ளி வைத்தல் போன்ற சலுகை அளிக்கப்படுகின்றது. அது போன்று ரூ. 100 கோடி முதல் ரூ. 200 கோடி வரையில் முதலீடு செய்யும் தொழிற்சாலைகளுக்கு ரூ. 50 லட்சம் பண முதலீடு ஆதாரத் தொகையாகவும், 6 வருஷத்திற்கு வரி விலக்கு அளித்தல் அல்லது 12 வருஷ காலத்திற்கு வரி செலுத்தும் காலத்தை தள்ளி வைத்தல் போன்ற சலுகை அளிக்கப்படுகின்றது. ரூ. 200 கோடி முதல் ரூ. 300 கோடி வரை முதலீடு செய்யும் தொழிற்சாலைகளுக்கு ரூ. 1 கோடி பண முதலீடு ஆதாரத் தொகையும், 6 வருஷத்திற்கு வரி விலக்கு அளித்தல் அல்லது 12 வருஷ காலத்திற்கு வரி செலுத்தும் காலத்தை

தள்ளி வைத்தல் போன்ற சலுகை அளிக்கப்படுகின்றது. ரூ. 300 கோடியும் அதற்கு மேலும் முதலீடு செய்யும் தொழிற்சாலைகளுக்கு ரூ. 1 கோடி பண முதலீடு ஆதாரத் தொகையும், 7 வருஷத்திற்கு வரி விலக்கு அளித்தல் அல்லது 14 வருஷ காலத்திற்கு வரி செலுத்தும் காலத்தை தள்ளி வைத்தல் போன்ற சலுகைகள் அளிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் தொழிற்துறை முன்னேறுவதற்காக இப்படி ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோடி ரூபாயை வரியாக வசூலிக்காமல் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, டாக்டர் க. கோபால், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

94—

ஆரூரான் சர்க்கரை ஆலை துவங்குதல்

***36449**—டாக்டர் க. கோபால்:*

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

நன்னிலம் தொகுதி, பேரளம் பகுதி, கொல்லுமாங்குடியில் ஆரூரான் சர்க்கரை ஆலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திருவாரூர் அருகில் வடபாதிமங்கலத்தில் இயங்கிவரும் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை யூனிட் நம்பர் 1 நன்னிலம் தொகுதி, பேரளம் பகுதி, கொல்லுமாங்குடியில் மாற்றி நிறுவும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. புதிய இடத்தில் இந்த ஆலை 1996 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் ஆலை துவங்கப்படுவதற்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்த ஆலையினுடைய கட்டுமானப் பணிகள் எல்லாம் மிக மெதுவாக நடைபெறுகின்ற ஒரு சூழ்நிலையில் அந்த ஆலையினுடைய அபிவிருத்தி மற்றும் அரவைத் திறனை ஜனவரி 96-க்குள் முடித்து, அது துவங்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்த ஆலையில் ஏற்படுகின்ற அந்தக் கழிவு நீரைப் பயன்படுத்தி, அங்கே மின்சாரம் தயாரிக்கப்படுமா என்பதையும்,